# இக்கட்டிடத்தில் உள்ள வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

Toronto Community Housing

## பாடசாலைக்குப் பிள்ளைகள் மீண்டும் போகத் தொடங்கும் காலத்தில் மின்தூக்கி உபயோகம்

இவ்வருட இலையுதிர் காலத்தின் பொழுது பிள்ளைகள் மற்றும் இளையோர் பாடசாலைக்கு மீண்டும் திரும்பச் செல்லும் காலத்தில் அவர்கள் எல்லோரையும் பாதுகாப்பாக வைத்திருக்க நாம் விரும்புகிறோம். பாடசாலை நாட்களில் தயவு செய்து பள்ளிக்கூட வயதினரான பிள்ளைகளுக்கு மின்தூக்கியில் பயணிக்க முன்னுரிமை கொடுங்கள். காலை மற்றும் பிற்பகல் ஆகிய நேரங்களில் மக்களின் புழக்கம் மிக அதிகமாக இருக்கும் நேரங்களில் இதனைச் செய்யுங்கள்.

உடல்ரீதியாக விலகி நிற்றல் மற்றும் முகக் கவசம் அல்லது முகத்தை மூடும் அங்கிக்கான தேவைப்பாடுகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்ற போதிலும், பாடசாலை நாட்களில் மின்தூக்கி உபயோகத்தில் காணப்படும் அதிகரிப்பினை சமாளிப்பதற்காக நாங்கள் சில மாற்றங்களைச் செய்ய விரும்புகிறோம்.



- மின்தூக்கியில் செல்ல அனுமதிக்கப்படுவோரின் அளவினை **மூன்று நபர்கள்** ஆக அதிகரித்து இருக்கிறோம். ஆயினும் ஒவ்வொருவரும் ஒரு முகக்கவசத்தை அணிந்து இருப்பதுடன், வெவ்வேறு குடியிருப்பு வீடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் இரண்டு மீற்றர் (ஆறு அடி) தூரம் விலகி நிற்பதும் அவசியம் ஆகும்.
- மாடிப் படிக்கட்டுகளை நாங்கள் தினந்தோறும் இரண்டு தடவைகள் சுத்தம் செய்து கிருமியகற்றும் பணியினை நடாத்துகிறோம்.
- மாடிப் படிக்கட்டுகளையும் உட்புகும் கதவுகளையும் நாங்கள் தினந்தோறும் இரண்டு தடவைகள் பார்வையிட்டு வருகிறோம்.

மாடிப் படிக்கட்டுகளில் அல்லது மின்தூக்கியில் பயணிப்போரின் பாதுகாப்புக்கு இடர் தரும் எதனையாவது நீங்கள் காண நேர்ந்தால், தயவுசெய்து கட்டிடக் கண்காணிப்பாளரிடம் தெரிவியுங்கள் அல்லது எமது குடியிருப்புச் சமூகப் பாதுகாப்பு அணிப் பிரிவுக்கு **416-921-2323** தொலைபேசி எண்ணில் அறிவியுங்கள்.

இந்தக் கையளிப்புப் பிரசுரத்தினை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் வேண்டுவதற்கு அழையுங்கள்: 416-981-5500.